முருகப்பெருமான் துணை

**மகான் யாகோபு அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.06.2022, செவ்வாய்கிழமை

1. தவசக்தியே ஆறுமுக அரங்கா
தரணி காத்திடும் அம்சமாக
அவதாரம் புரிந்த தேசிகனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது விடை திங்கள்
குறைவிலா அறுநான்கு திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 24 ம் நாள், 07.06.2022 செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு யாகோபு யானும் உரைப்பேன்
3. உரைப்பேன் உலகநலம் பெற
உயிர் காக்கும் ஞான வழிகளை
குறையின்றி அரங்கன் காட்டும்
குருமார்க்கமாக ஏற்று வர
4. வருகவே மக்களிடை தெளிவு
வந்தடையும் சர்வபலமுமாக
தரும சிந்தையும் பெருகிடவே
தவராஜன் வழிகளை பின்பற்ற
5. பின்பற்ற தரும வான்களாகியே
பேதமிலா வாழ்வு நலம் காண்பர்
இன்பமான ஞானிகள் பூசை
இனிமேலாய் மக்கள் தினமும் செய்து
6. செய்துமே அரங்கன் காட்டும்
சித்தமார்க்க நெறிமுறைகள்
அய்யமிலா ஏற்றுப் பணிந்து
அரங்கா முருகா எனவருக
7. வருக தன்நிலை தேறி
வருங்காலம் அறியும் தெளிவு
பெருமை மிக்க வாழ்வுமுறை
பேரின்பம் காட்டும் செயல்கள் கூடி
8. கூடியே அழியாமை கொண்ட
குறையிலா ஞானவான்களாகி
தேடிடும் அரங்கன் சக்திமிகு
தெய்வ பலம் கொண்டவர்களாகி
9. ஆகியே உலகை மாற்றும்
ஆற்றலும் பலமும் அடைவர்
அகிலத்தின் அனைத்து திக்கிலும்
அரங்கன் சக்திமிகு அன்பர்கள் உருவாக

10. ஆகவே கலியின் சிக்கல்
ஆபத்து யுத்த கலகங்கள்
வகையிலா பேரிடர்களும் விலகி
வையகம் பாதுகாப்பு காண்கும்

11. காண்கவே கருணை நிறைந்த
கந்தவேலன் அவதார ஞானி
நன்மைதரும் அரங்கன் வழி வர
நாடெங்கிலும் ஞான ஆட்சிமலரும்
அருளாசி முற்றே

–சுபம்–